ISSN : 2349-1914



# நுடே இதழ்

பன்னாட்டு ஆய்விதழ்

International Journal

செப்டம்பர் 2025 மலர் – 12 இதழ்–09

செப்டம்பர் - 2025 மலர் - 12 இதழ் - 9 ISSN : 2349 - 1914

# டுடே இதழ்

## (பன்னாட்டு ஆய்விதழ்)

## (TODAY ITHAZH-International Journal)

ஆசிரியர் - வெளியீட்டாளர்

**ரெ.பாபு**

**TODAY PUBLICATION**

192, Bells Road, Chepauk,

Chennai-600 005

போன் : 044-28553797, செல்: 9840083738 Email: todaybabu@gmail.com, babu_today@yahoo.com

டுடே இதழ் (பன்னாட்டு ஆய்விதழ்)

ISSN : 2349 - 1914

# பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அப்துல்கலாமும் அமிழ்தத் தமிழும்<br>– வெ. ராம்ராஜ் | 5 |
| 2. | முதுமொழிக்காஞ்சியின் யாப்பு<br>– ப. திருஞானசம்பந்தம் | 8 |
| 3. | பெரியாரின் பார்வையில் தமிழிலக்கியங்கள்<br>– ப. சீனிவாசன் | 15 |
| 4. | பட்டினப்பாலை நல்கும் விளம்பு நிலை மக்களின் வறுமை<br>– க. திருப்பதி | 20 |
| 5. | சங்க இலக்கியங்களில் கணினித் தொழில்நுட்பவழி பனுவல்சார் பயன்பாடுகள்<br>– பொ. மஞ்சுபாஷினி | 25 |
| 6. | பத்தொன்பதாம் நூற்றாண்டு : தமிழில் அறிவியல் சிந்தனை<br>– க. செந்தில் ராஜா | 29 |
| 7. | புதுக்கவிதையும் தவிர்க்க முடியாமையும் (எழுத்து – கவிதைச்சூழலை முன்வைத்து)<br>– ச. அன்பு | 33 |
| 8. | பெயரெஞ்சுகிளவி – தொடரியல் அணுகுமுறை<br>– சு. சரவணன் | 37 |
| 9. | முப்பெரும் கவிமணிகளின் வாழ்வும் படைப்பும்<br>– ஜா. பென்னிதாமஸ் | 47 |
| 10. | ஆவணங்கள் : சுவடிகள் – ருக்மிணிபரிணயம்<br>– அ. ரேவதி | 52 |
| 11. | அகத்திணை<br>– க. அனுராதா | 57 |
| 12. | சீர்திருத்தச் சிந்தனையில் வள்ளலாரும் பிறரும் – ஒப்பியல் பார்வை<br>– ஏ. சீனிவாசன் | 59 |
| 13. | நாட்டுப்புறப் பாலியல் கதைகளில் விளிம்பு நிலை மக்கள் சித்தரிப்பு<br>– ஆ. சின்னதுரை | 66 |

ISSN : 2349 - 1914

14. பாரதியார் பாடல்களில் பெண் கல்வி 72
– ஜி. முல்லைக்கொடி

15. சோ. தர்மன் சிறுகதைகளில் கதை மாந்தர்களின் பண்பு 75
– ரெ.மோ. டில்லி முனைவர் & யு. துர்காதேவி

16. பாரதியார் பாடல்களில் பன்முகப்பார்வை 80
– சா. பாலசுந்தரம்

17. ஒப்பாரிப் பாடல்களில் சாதிய வெளிப்பாடுகள் 83
– பெ. தேவி

18. பெரியாரின் பார்வை : பெண்ணியம் 88
– ப. கமலக்கண்ணன்

19. வாய்மொழி வழக்காறுகளில் கிடைக்கும் மருத்துவக் குறிப்புகள் – ஓர் ஆய்வு 91
– ச. கோகிலா

டுடே இதழ் (பன்னாட்டு ஆய்விதழ்) ISSN : 2349 - 1914

# சோ. தர்மன் சிறுகதைகளில் கதை மாந்தர்களின் பண்பு

**ரெ.மோ. டில்லி**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
**முனைவர் யு. துர்காதேவி**
உதவிப்பேராசிரியர் & நெறியாளர், தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சிநிறுவனம்
பல்லாவரம், சென்னை 117.

ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வாழ்க்கை முறைகளையும் அனுபவங்களையும் ஏதோ ஒரு சந்தர்ப்பங்களில் எடுத்துரைக்கிறார்கள். அப்படித்தான் படைப்பாளர்களும் தங்களுடைய வாழ்வியல் முறைகளைப் பற்றிய சிறுகதை, புதினம் போன்ற நூல்களின் மூலம் எடுத்துரைக்கின்றனர். ஒரு சிறிய நிலப்பரப்பில் பொது வாழ்க்கை முறையை பின்பற்றி கூட்டமாக வாழும் மக்கள் தொகையை சமுதாயம் எனலாம். இதனால் சமுதாயத்தில் வாழக்கூடிய ஒவ்வொரு மனிதர்களும் சமுதாய உணர்வு என்ற எண்ணம் எல்லோரிடத்திலும் மேலோங்கி நிற்கும் சமுதாயத்தையும் அதில் வாழக்கூடிய பல்வேறு தரப்பட்ட மனிதர்களையும் அவர்களுடைய இன்ப துன்பங்களையும் அதற்கான தீர்வுகளையும் ஆராய்கின்ற வகையில் சிறுகதை முக்கிய பங்கு பெற்று வருகிறது. கதைகளில் வரும் கதை மாந்தர்கள் ஒவ்வொருவரும் ஒரு தனித்த பண்பு உண்டு. இத்தகைய போக்கு பல கதை மாந்தர்களின் சிறப்புகளை பற்றி தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

சோ.தர்மன் நீர்ப்பழி என்னும் சிறுகதையின் மூலம் சமுதாயத்தில் வாழக்கூடிய பல வகையான மனிதர்களின் குமறல்கள், வறுமை, வழிபாடு, சாதி ஏற்றத்தாழ்வு, விவசாயம், கரிசல் மக்களின் நிலை, மனிதநேயம், கல்வி, பெண்களின் நிலை போன்றவற்றை எடுத்துரைத்துள்ளார். அது மட்டும் இல்லாமல் குடும்பங்களின் கூட்டமைப்பின் மூலம் படைப்பாளர் தன் சிந்தனையை சமுதாயம் என்னும் சொல்லால் தான் வாழும் பகுதியை கலைஞர் அப்படியே வெளிக்கொணந்துள்ளார். சமுதாயத்தில் காணும் மனிதர்களையும் நிகழ்ச்சிகளையும் கண்டு அவற்றை மனதில் வைத்துக் கொண்டுதான் அவற்றை மிகவும் பாதித்த செய்திகளை தன்னுடைய சிந்தனையும் சேர்த்து கலை வடிவமாக ஆக்கியுள்ளார்.

**சுப்புக்குட்டி**

ஒவ்வொரு குடும்பமும் ஏதோ ஒரு சூழ்நிலையில் வறுமையின் பிடியில் சிக்கி தவிக்கின்றன. வறுமையின் காரணமாக குடும்பத்தில் உள்ள அனைவரும் வேலைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதனால் குழந்தைகளின் கல்வி முழுமையாக பாதிக்கப்படுகிறது. அதேபோல் சுப்புக்குட்டி தன்னுடைய நிலத்திற்கு வாங்கிய கடனை அடைக்க முடியாமல் தவிக்கிறார். அவருடைய பொண்டாட்டி வாயெல்லாம் பல்லாகவும், நகையில்லாத மூளியாகவும் கலயம் இல்லாத உறிச் சங்கிலியாய் தொங்குவதே பார்க்க வெறிச்சோடி சென்றது. சுப்புவின் மகன் மொட்டையன் வீட்டின் நிலைமையை அறிந்து பள்ளிக்கூடம் செல்வதில்லை. தான் வாங்கிய கடனுக்காக சோவென்னாவிடம் கூனி குறுகி நிற்கின்றான் சுப்புக்குட்டி. (விருவு ப.4) பிறகு ஒருநாள் சுப்புக்குட்டி தன்னுடைய விளை நிலத்தில் மனைவி மற்றும் மகனுடன் சென்று கடவுளை வழிபட்டு தன்னுடைய நிலத்தில் வேலை செய்து சிறிது சிறிதாக கடனை அடைத்து வருகிறார்.

**சிவகாமி**

இளம்பெண்ணான தங்கம்மாளின் மகள். மழையின் காரணமாக தீப்பெட்டி கம்பெனி வேலையில்லாத காரணத்தால் உணவுக்கு

ISSN : 2349 - 1914

வழியில்லாமல் தவிக்கின்றனர். தங்கம்மாள் வறுமையின் காரணமாக முதலாளியிடம் அட்வான்ஸ் வாங்கலாம் என கம்பெனிக்கு செல்கின்றாள். ஆனால் முதலாளி இல்லாததால் போர்மேனிடம் துத்தம் கலக்காத மாவை வாங்கி வந்தாள். ஆனால் அவள் வருவதற்குள் பசியால் இருந்த சிவகாமியை ஏற்கனவே வீட்டிலிருந்த துக்கம் கலந்த மாவை சாப்பிட்டு வாயில் நுரையுடன் இறந்து கிடந்தாள். (ஈரம் ப.60) தினமும் வேலைக்குச் சென்றால் தான் உணவு வயிற்றை நிரப்ப முடியும் என நினைத்து வாழ்வு மனிதர்கள் இந்த அடைமழை காலம் மிகவும் வருத்தத்தை அளிக்கிறது. விவசாயம், தீப்பெட்டித் தொழிற்சாலை, கட்டடத் தொழில் செய்பவர்கள் முதலானவர்கள் எல்லாத் தொழிலும் முடங்கிப் போகும். கோடையில் சேமித்தால் தான் மழைக்காலத்தில் நிம்மதியாக வாழ முடியும். ஆனால், ஒருவேளை சோற்றுக்கே வழியில்லை என்னும்போது எப்படி சேமிக்க முடியும்.

"தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்றான் பாரதி இந்நிலை மாற வேண்டும் வறுமை என்னும் கொடிய நோயை அகற்றப்பட வேண்டும்.

**பொன்னுசாமி**

வேலை தேடி மக்கள் ஊர் ஊராக அலைந்துக் கொண்டிருக்கிறார்கள். இது என்ன சாதி வந்து என்ன சோறு போடுவது என தெரியாத ஒரு சில மக்களால் தான் பிரச்சனை ஏற்படுகிறது. பிறகு என்ன சாதியா சாதி சாதினு சாதியா இப்ப வந்து சோறு போடும். எந்த பயலுகளாவது நாலு கொழுத்த பயக சண்டை போட அந்தப் பேச்சைக் கேட்டுகிட்டு இந்த பயங்க ஊருக்குள்ள வா பஸ்ச கொளுத்த பஸ் கொளுத்திட்டா சாதி பிரச்சனை முடியுமா? வெந்த கஞ்சிய குடிச்சிட்டு விதி வந்தா சாவ்னு இருக்குற நமக்கெல்லாம் என்ன சாதி வேண்டி கிடக்கு. (அப்பாவிகள் ப. 102) சாதிவெறியால் பேருந்து கொளுத்தியதும் ஊரே வெறிச்சோடியது. இதனை அறியாத பொன்னுசாமி கையில் மண்ணெண்ணெய் கொண்டு வந்ததால் இவர்தான் பஸ்ஸை எரித்தார் என்று அவரை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். இதை இது போன்ற அப்பாவிகள் மக்கள்தான் தண்டிக்கப்படுகின்றன. யாரோ செய்த தவறுக்கு ஒன்றும் அறியாத அப்பாவியான பொன்னுசாமி இங்கு தண்டனை பெறுகிறார். சாதி வெறியால் ஒருவனை ஒருவர் வெட்டிக் கொள்வது ஒரு பக்கம் என்றால் இது போன்ற அப்பாவிகள் தண்டிப்பது மறுபக்கமாக இருக்கிறது.

**பூசாரி**

முதலாளி சொல்ல மக்கள் அனைவரும் ஒன்று கூடினர். நான் பூசாரியிடம் இந்த பாத்தில் தொங்குவது என்ன என்று கேட்டேன். இது வந்து முதலாளி இந்த ஊரைச் சுற்றியுள்ள மக்கள் அனைவரும் இங்கு வந்து கும்பிட்டு போனால் போதும் மறு மாசமே ஆடோ,மாடோ சினையாகிப் போகும். அதேபோல கல்யாணம் ஆகி குழந்தை இல்லாதவங்க எத்தனையோ பேரு இங்க வந்து பிறகு மறுமாசமே குழந்தையோடு வந்து மொட்டை போட்டு பொங்கல் வைத்துவிட்டு போறது உறுதி. அவ்வளவு துடிப்பான சாமி. பூசாரி சொன்னது மாதிரியே கல்யாணம் ஆகி நாற்பது வயதாகியும் குழந்தை இல்லாத எங்களுக்கு இப்ப வாரிசு வளருது துளசி சாறு சாப்பிட்ட மறுமாசமே மொட்டைசாமி எங்களுக்கு வரம் கொடுத்துட்டாரு. இன்றைக்கும் வருசம் ஒரு நாம் அன்னதானம், குருபூஜை, பொங்கல், ஆட்டம் பாட்டம் என கோவிலுக்கு ஏகப் போகி போய்விட்டது. (கோணல்கள் ப .107)

**பாட்டி**

பேருந்தில் பயணம் செய்கின்ற பாட்டி மற்றும் மகள், மருமகளுடன் ஆய்ந்த இரக்கத்தில் இருந்தன. இதனை அறிந்த பக்கத்துச்சீட்டுக்காரர் குழந்தையின் தலை ஜன்னலோரம் உட்கார்ந்திருந்த பெண்ணின் மடியில் இருந்தது. கால்கள் பேருந்து நடைப்பாதையோரம் கிழவிக்கு இடது பக்கமும் உட்கார்ந்திருந்த பெண்ணின் மடியிலிருந்தது. இதை உற்று கவனித்திருந்த பக்கத்து சீட்டுக்காரர் கிழவியிடம் பேச்சை கொடுக்க ஆரம்பித்தார். குழந்தை வாயால வகுத்தா

ISSN : 2349 - 1914

போச்சு சரின்னு ஆஸ்பத்திரிக்கு போய் சேர்த்தோம். ரெண்டு பாட்டில் குளுக்கோஸ் ஏத்தியும் புள்ள நாளா தெளிச்சி குடுத்திருச்சி கூட வந்த மகனும் மத்த ஆம்பளைங்களும் காலையில வரேன்னு போயிட்டாங்க ராத்திரி பாருங்க ஜன்னி மாதிரி வந்து வெட்டி வெட்டி இழுத்து ஒரே வீச்ல புள்ள சுருட்டிச்சு சிறிது நேரத்தில் இறந்துவிட்டது.(குருத்து ப. 80) இருவரும் பேசிக்கொண்டே வந்தனர்.கிழவி இறங்குமிடம் வந்தவுடன் குழந்தையின் தலையை ஆட விடாமல் இருகிபிடித்து இறங்கினர். மூன்று பெண்களும் காட்டின் வழியாக தனது இறந்த குழந்தையை உடலை எடுத்துக் கொண்டு செல்கிறனர். அவர்களுக்கு துணையாக அய்யாவும் செல்கிறார்.முன் பின் தெரியாத ஒருவர் தன்னுடைய பயண நேரத்தில் தன்னை பாதித்த நிகழ்வை பற்றி எடுத்துரைத்துள்ளார்.

**குரூஸ்**

மதம் என்னும் ஜாதி வெறி, சண்டை, மூடநம்பிக்கை தீண்டாமை போன்றவற்றையே குரூஸ் முழுவதும் எதிர்க்கிறார். முச்சந்தியம்மன் கோயில் திருவிழா இன்னும் நான்கு நாட்களில் நடைபெறுகிறது. ஆனால் முத்துப்பேச்சுயின் கணவன் இறந்து விடுகிறார். மேலக்குடியில் கட்டமொழி வாங்குவது என்பது சுலபமல்ல. ஏனெனில் அந்த ஊரில் தவறு செய்திருந்தால் அவர்கள் மொழி வைக்க மாட்டார்கள்.இதையெல்லாம் தெரியாத குரூஸ் கோவணம் கட்டி வேலைக்கு செல்லும் போது அங்கு இருப்பவர்கள் அவரை பார்த்து சிரிக்கிறார்கள். அதற்கு அவன் எங்கப்பன் பழனி முருகன் கோவணத்துடன் தான் இருக்கிறார். (மனிதம் ப.34) எனக்கு என்ன இருக்கு அப்படின்னு தோளில் ஏர்க்கலப்பை கொண்டு சென்று புறப்பட்டான். அப்போது தவறுதலாக கஞ்சியை ஐயர் மேல் கொட்டினார்.உடனே ஐயர் பஞ்சாயத்தை கூட்டி குரூஸுக்கு தண்டனை வழங்கினர். மக்கள் சாதி வெறியை அடிப்படையாகக் கொண்டாலும் குரூஸின் செயலால் மக்கள் அனைவரும் நல்ல முறையில் ஒன்று சேர்ந்து வாழ ஆரம்பித்தார்கள்.

**மாரியம்மாள்**

மாரியம்மாள் தீப்பெட்டித் தொழிற்சாலையில் வேலைச் செய்து வருகிறாள். தன்னுடைய நிலைமையை அறிந்து மாப்பிள்ளை வீட்டார் பெண் பார்க்க வருகிறாள். கருப்பசாமிக்கும், மாரியம்மாளுக்கும் திருமணம் நடைபெற்றது. கிராமத்தில் இன்னும் பெருமளவில் தெருக்களில் சீரியல் லைட்டு போட்டு கலை நிகழ்ச்சிகள் நடத்தி தாய்மாமன் சீர் கொண்டு வருகின்றன. பரிசுபொருள், வெற்றிலைக் கட்டு போன்றவை நம் பாரம்பரியத்திற்கு ஏற்ற முறையில் நாட்டாமை தலைமையில் திருமணம் நடந்தது. எத்தனையோ கனவுகளோடு வந்த மாரியம்மாள் தன் மாமனார் வாங்கிய கடனுக்காக மீண்டும் கம்பெனிக்கு செல்கின்றாள் (அடமானம் ப.59.) ஒரு பெண் எத்தனை கனவோடு திருமண வாழ்க்கையில் ஈடுபடுகிறாள். சிலருக்கு நல்ல முறையில் தான் அமைகிறது. பல பேருக்கு போராட்ட வாழ்க்கை அமைகிறது.

**செவிலியர் (நர்ஸ்)**

மருத்துவமனையின் இரவு நேரத்தில் ஆறுமுகம் என்ற நபர் சிகிச்சை பெறுவதற்காக வருகிறார். அவர் கை, கால்கள் முழுவதும் அடிபட்டு இருப்பதால் செவிலியர்கள் அவரை மருத்துவமனையில் அனுமதிக்க வில்லை.பிறகு மருத்துவரை சந்தித்து மருத்துவமனையில் அனுமதி பெறுகிறார். அவருக்கு இரண்டு காவலர்கள் துணையாக இருந்தன. மறுநாள் காலையில் தேவதை போல ஒரு செவிலியர் வந்தாள். (சிகிச்சை ப 437) அவளுடைய அன்பும் அரவணைப்பையும் பார்த்து ஆறுமுகத்தை நல்ல வழிப்படுத்தினார். ஒருநாள் தனது பக்கத்து இருந்த பெண்ணின் கதையைக் கேட்டு தன் திருமணத்திற்காக வாங்கிய நகைகளை ஒருவர் திருடிச் சென்று விட்டதாகவும் அதனால் மன உளைச்சலில் மருந்து குடித்து மருத்துவமனையில் உள்ளதாகவும் கூறினார். இதுவரை ஆறுமுகம் திருடிய அனைத்து பொருட்களையும் செவிலியரின் டிபன் பாக்ஸில் வைத்து விட்டு இதை அப்பெண்ணிடம் ஒப்படைக்கவும்.

ISSN : 2349 - 1914

இனிமேல் நான் எக்காரணத்தை கொண்டும் திருட மாட்டேன் என்று கூறிவிட்டு சென்றார்.

**விஜயகுமார்**

சிறைச்சாலையில் பணிபுரிந்து வரும் உயர் அதிகாரியான விஜயகுமார். சிறையில் உள்ள மிகக் கொடூரமான கொலைகாரர்களான மூன்று பேரை தேர்ந்தெடுத்து அவர்களை அணில் குட்டி, மைனா குஞ்சு, கிளி குஞ்சு முதலியவற்றை கொடுத்து வளர்க்க சொன்னார். (மைதானம் 305) அந்த மூன்று கைதிகளும் பறவைகளுடன் மிகவும் அன்பாகவும் பழகி வந்தனர். அணில் குட்டி சாப்பிட வரவில்லை என்றால் அதைத் தேடியும் செல்லும் அளவிற்கு அந்த கைதி மிகவும் அதனுடன் ஈடுபாட்டுடன் வாழ்ந்து வந்தார். ஒரு நாள் அணில் குட்டி மரத்தின் மேல் ஏறி வெளியே சென்று விட்டது. அதை பார்த்த கைதியையும் அவ்வாறே வெளியில் சென்று விட்டார். இதை அறிந்த விஜயகுமாருக்கு பயம் ஏற்பட்டது. பிறகு அக்கைதி திரும்பவும் சிறைச்சாலைக்கு வந்து விடுகிறான். ஏதோ ஒரு சந்தர்ப்ப சூழ்நிலையால் ஒரு மனிதன் கோபத்தில் செய்து தவறை நினைத்து வாழ்நாள் முழுவதும் தண்டனையை அனுபவித்து தன் மனைவி மற்றும் குழந்தைகளை விட்டு வாழும் கைதிகளின் நிலையை கூறுகிறது.

**பொன் மாடன்**

பொன்மாடன் என்ற ஆசிரியர் வீட்டில் எப்பொழுதும் ஆண் மற்றும் பெண் குருவிகள் சத்தமிட்டு கொண்டே இருக்கும். ஒருநாள் அவருடைய அறையில் இரண்டு குருவிகளும் சத்தமிட்டு விளையாடிக் கொண்டிருந்தன. இதனை பார்த்த பொன்மாடன் திடீரென கதவை அடைத்துவிட்டு இரண்டு குருவிகளை அடிக்க முற்பட்டார். ஆண் குருவியும் வெளியே ஓடிவிட்டது. பெண் குருவே மாட்டி இறந்துவிட்டது. ஒருநாள் இரவு முழுவதும் ஆண் குருவி மட்டும் பரிதாபமாக மரத்தில் உட்கார்ந்து இருப்பதை பார்த்த பொன்மானுக்கு தூக்கமே வரவில்லை. கோவிலுக்கு சென்று அங்கு சுவாமியிடம் நடந்ததை கூறினார். மூன்று நாட்கள் பூஜை செய்து வரவும் என்று கூறினார். ஆண்குருவி மற்றும் பெண் குருவி ஜோடியாக வந்தன. (விட்டு விலகி ப188) பிறகு அவற்றை பாதுகாத்து கம்பம், புல் முதலியவற்றை தானமாக வழங்கினார்.

**பாலிஷ்**

பாலிஷ் என்ற நரிக்குறவன் தன் மனைவி மற்றும் மகனுடன் வாழ்ந்து வருகிறான். ஒருநாள் நீங்கள் முயலைப் பிடிக்க காட்டிற்குச் செல்லும்போது என்னையும் அழைத்து செல்லுமாறு கூறினார் சார். நீங்கள் எதுக்கு காட்டுக்கு வர வேண்டும் என கேட்டேன். ஒவ்வொரு உயிரும் எவ்வாறு கொல்லப்படுகிறது என்பதை பார்ப்பதற்காக என்றார். சிறிது தூரம் சென்ற பிறகு இரண்டு முயல்கள் விளையாடுவதைப் பார்த்த பாலிஸ் அவற்றை சுட்டு தள்ளினான். இரண்டையும் ஐம்பு கிழவன் சுமந்து வந்தான். மின்வேலியில் மாட்டி பாலீசு கருகிய நிலையில் உயிரினான். ஐம்பு கிழனும் ஆசிரியரும் விடிய விடிய பாலிசுக்கு உடன் இருந்தனர். மின்வேலியில் மாட்டி பாலிஷ் இறந்ததை கண்டு மனம் மிகவும் வருந்தியது. ஒரு உயிரை கொல்வது பாவம் என்று கூறிய பாலிஷ் தற்போது மின்வேலியில் மாட்டிக் கொண்டு இருந்தது மிகவும் வருத்தத்தை அளிக்கிறது.

**வெயிலாச்சி**

வெயிலாச்சி வீடு வீடாக சென்று பூ விற்று வரும் தொழிலை செய்பவள். தன்னுடைய அக்கா இறந்து விட்டதால் மாமாவிற்கு இரண்டாவது திருமணம் செய்து கொண்டன. அக்காவுடைய மூன்று பிள்ளைகளையும் பார்த்து வந்தாள். மாணிக்கமும் மாரியம்மாளும் வெயிலாச்சின் மீது அன்பும் அரவணைப்பும் கொண்டவர்களாக இருந்தன. பூவிற்கு விற்கும் வெயிலாச்சின் குரலுக்கு தனி மவுசு தான். (மணம் ப.90) கருவுற்ற பிறகு அவர் பூ விற்கும் வரை மாரியம்மாள் உதவிகளை செய்து வந்தாள். குழந்தைக்கு உப்பு சத்து அதிகமாக விட்டதாகவும் குழந்தை வயிற்றுக்குள்ளே செத்துப் போனதாகவும் வெயிலாச்சிக்கு ரத்த கொதிப்பு அதிகமாகி விட்டதாலும், இளம் வயதிலேயே திருமணம் செய்து கருவுற்றதால் குழந்தை பிறந்தவுடன் அவளும் இறந்துவிட்டாள். தன் வாங்கிய

 ISSN : 2349 - 1914

பணத்தை இறந்து பிறகும் திருப்பித் தர வேண்டும் என்ற எண்ணம் வெயிலாச்சியின் உயர்ந்த இடத்தில் வைத்தது.

**வேலுச்சாமி**

பாண்டவர்மங்கலம் வேலுச்சாமி என்றால் அனைவரும் அறிந்தது ஏனென்றால் அவர் செய்யும் தொழில் சாராயம் காய்ச்சுவது ஆகும். (தழும்பு 180) காவலர்கள் ஒருநாள் தன் மனைவியான சின்ன மாடத்தியை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரித்தனர். இதனால் மனமுடைந்த வேலுச்சாமி இந்த தொழிலை விட்டுவிட்டு வேறு தொழில் செய்ய வேண்டும் என உறுதி பூண்டார். பிறகு அருவாள், உளி போன்ற பொருட்களை பழுக்க காச்சி கூர் தீட்டி சந்தையில் விற்று வந்தார். சின்ன மாடத்தை இப்போது தான் மிகவும் சந்தோஷமாக வாழ்கிறார்.

**வீரபத்ரபிள்ளை**

முப்பது ஆண்டுகால அரசு ஊழியர் வாழ்க்கை சோதனைகளும் வேதனைகளும் உள்ளடக்கியது. வீரபத்திரன் பிள்ளைக்கு உடல்நிலை சரியில்லதால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். (விசாரம் ப.164) பல ஆய்வு, பரிசோதனைகளை மேற்கொண்டனர். இவருக்கு மூலம் என்பது தெரிய வந்தது சித்த வைத்திய முறையில் சுந்தர கணபதியே அணுகினார். மருத்துவம் உங்கள் மனைவியின் கர்ப்பப்பை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அதை உடனே அப்புறப்படுத்த வேண்டும் என்று கூறினார். வீரபத்திரன் தன்னுடைய மூன்று வருட சர்வீசையும் விட்டு அந்த வேலை தன்னுடைய மகன் பொன்மாடனுக்கு வாங்கி தருகிறார். பொன்மாடனுக்கு பணி அளித்த தந்தையின் செயல் மிகவும் அருமை எனலாம்.

**விஜி**

மிதிவண்டியை ஓட்டி செல்லும்போது எதிர்பாராத விதமாக அடிபட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டான் விஜி. மருத்துவமனையில் இருந்து பல பரிசோதனைகளை செய்தனர். நானும் என் மனைவியை மருத்துவமனையில் உள்ள விநாயகரை வழிபட்டு, தன்னுடைய மகனுக்கு குணமாக வேண்டும்.என்றும் தூங்குவதற்கு முன் புதிய புதிய கதைகளை சொல்லுவேன்.(மருந்து ப 470) மருத்துவமனையில் தன் மகனின் நிலையை கண்டு இருவரும் வருந்தினர்.மூன்று நாட்களுக்குப் பிறகு மகனை நிலை சிறிது முன்னேற்றம் அடைந்தது.என்னுடைய பாட்டி முத்தம்மாள் முந்தானையில் முடித்து வைத்திருந்த விபூதியை நெற்றியில் வைத்து பூசினாள் பிறகு என்னுடைய மகன் சிறிது சிறிதாக குணமடைந்தான்.

கரிசல் நில மக்களின் வாழ்க்கை முறையை சிறுகதையின் வாயிலாக ஒவ்வொரு கதை மாந்தர்களுடைய பண்புகளையும் ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார். பிறப்பால் உயர்ந்தோர்,தாழ்ந்தோர் என்ற வேறுபாடு இன்றி அனைவரும் சமம் என்ற உணர்வு ஏற்பட வேண்டும். போட்டி நிறைந்த இவ்வுலகில் மனிதர்கள் ஒவ்வொருவரும் தன்னால் முடிந்த வரைக்கும் பிறருக்கு உதவிசெய்ய வேண்டும்.

**துணை நூற்பட்டியல்**

1. சோ.தர்மன் :நீர்ப்பழி 68 சிறுகதைகள்; அடையாளம் பதிப்பகம், 2020.

★ ★ ★